1973 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

செவிலி உதவிப் பயிற்சியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, கோவையில் செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதும், அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மருதாசலம் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை 42-வது விதியின் கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வரும் என சுருக்கமாக அவர் விளக்கலாம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, 3—3—73 ஆம் தேதி கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 40 செவிலி உதவி பயிற்சியாளர்களை திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் அங்கு பணிபுரிந்த சுமார் 140 செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தினால் நோயாளிகளுக்கும், பொது மக்களுக்கும் தாங்க முடியாத துன்பம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கின்ற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி விவாதிக்க சபையின் மற்றைய அலுவல்களை ஒத்தி வைக்கக் கோருகிறேன்.

* ***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :*** தலைவரவர்களே, செவிலிப் பணி உதவியாளர்கள் என்ற நிலையிலே உள்ள எம்.என்.ஓ.க்கள் யாரும் வேலையிலே இருந்து நீக்கப்படவில்லை. செவிலிப் பணி உதவியாளர் அப்ரண்டிஸ்—பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கக் கூடிய 40 பேர் பயிற்சி பெறுகிற ஆறு மாதத்திற்குள்ளாக அவர்கள் தங்கள் பயிற்சி பெற வேண்டிய பாட திட்டத்திலுள்ளவாறு வார்டுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது—'ஸ்வாபிங்'—சோப்புப் போட்டு தண்ணீரால் கழுவுவது—ஆகிய இந்த வேலையைச் செய்ய மறுத்த காரணத்தால் பயிற்சி காலத்திலேயே